# 'மொகல்' உணவுத்திருவிழாவில் ஷாஜகான், நூர்ஜகான்: களைகட்டுது ரம்யாஸ்

திருச்சி, செப்.11-

திருச்சி ரம்யாஸ் ஓட்டல் மெரீடியன் மல்டி குசைன் ரெஸ்டாரன்டில் மொகலாயர்கள் உணவு வகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வகையில் 'ரிச்னஸ் ஆப் மொகல்' என்ற பெயரில் மொகலாய உணவு திருவிழா நடைபெறுகிறது.

கடந்த 7ம் தேதி தொடங்கிய இந்த உணவுத்திருவிழா வரும் 15ம் தேதி வரை நடைபெறுகிறது. இதையொட்டி வாடிக்கையாளர்களுக்கு முழுக்க முழுக்க தந்தூரி முறையில் தயாரிக்கப்பட்ட 'அக்பர்ஸ் கோர்ட் சிக்கன், ஜகாங்கிர் சீக் கெபாப் (மட்டன் வகை), பாபர் எம்பரர் மெகாலி பிஷ்(மீன்), கோல் கொண்டா கெபாப் (சைவம்) ஆகியவை உள்ளன.



உணவு திருவிழாவில் இடம் பெற்றுள்ள சில உணவு வகைகள்.

**பிரியாணி வகைகள்:** காஷ்மீரி ஸப்ரான் கெபாப் பிரியாணி (சிக்கன் பிரியாணி), ஷாஜகான் கோஸ்ட் பிரியாணி(மட்டன் பிரியாணி), நூர்ஜகான் சீ புட் பிரியாணி(மீன் பிரியாணி), ஹரியாலி வெஜிடபிள் பிரியாணி ஆகியவை இடம்பெற்றுள்ளன. வழக்கமான இந்திய முறைப்படி அல்லாமல் மொகலாயர்கள் காலத்தில் தயாரிக்கப்பட்டது போன்றே இந்த பிரியாணி வகைகள் பாதாம், பிஸ்தா மற்றும் உலர் பழ வகைகள் கொண்டு அந்த கால ருசியுடன் பரிமாறப்படுவது சிறப்பம்சம். இதுதவிர காரா மசாலா சிக்கன், ஜெய்புரி லால் மாஸ் (மட்டன் வகை), பக்ஹாரி ஜிங்கா (இறால்), சொர்ஸி பாடா மாச்(வங்கதேச மீன் உணவு வகை) போன்ற கிரேவி வகைகளும், ஹுமாயுன் நான், ஜகாங்கீர் நான், மற்றும் உணவுக்கு பின் சாப்பிடக் கூடிய மெகாலை ஸ்பெஷல் கீர், ஹாகீ துக்ரா ஆகிய வகைகளும் இடம் பெற்றுள்ளன. மொகலாய உணவு வகைகள் அனைத்தும் நம் ஊர் மசாலா ஐட்டங்களை தவிர்த்து தயாரிக்கப்பட்டவை என்ற கூடுதல் தகவலை தந்தார் செப் துரைராஜன். வாடிக்கையாளர்களை வரவேற்கும் வகையில் மொகலாயர்கள் அரண்மனை நுழைவு வாயில் போன்ற வடிவமைப்பில் இருபுறமும் காவலர்கள் கையில் ஈட்டி ஏந்தி நிற்கின்றனர்.

உணவு கூடத்தில் நுழையுமிடத்தில் மொகலாயர்கள் அரண்மனை சிப்பந்திகள் உடையணிந்த பணியாளர்கள் வாடிக்கையாளர்களை வரவேற்று அழைத்து சென்று அமர வைக்கின்றனர். இந்த காட்சிகள் ஒரு மொகலாய அரண்மனையில் நுழைந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தும் என்று கூறும் ரம்யாஸ் ஓட்டல் நிர்வாகி நித்தியகுமார் விரைவில் வேறு ஒரு வகை உணவு திருவிழாவுக்கு ரம்யாஸ் ஓட்டல் தயாராகி வருகிறது என்றார்.